## வடக்கு மாகாண சபை – 2021

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடக்கு மாகாண சபையின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 09 நவம்பர் 2022 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையானது 06 திசெம்பர் 2022 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியானது 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து வடக்கு மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடக்கு மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமைகளை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மூலதன சொத்துக்களை புனரமைத்து மேம்படுத்துவதற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா.253,384,916 நடைமுறையல்லா சொத்துக்கள் | சுற்றுநிருபங்களுக்கு அமைவாக 2017 ஆம் ஆண்டில் இருந்து இவ் நடைமுறையே பின்பற்றப்படுவதுடன் அரச கணக்குகள் திணைக்களத்தினால் உள்ளகச் | புனரமைத்து மேம்படுத்துவதற்காக ஏற்பட்ட செலவினம் நடைமுறையல்லா சொத்துக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்காததால் சொத்துக்களின் பெறுமதி அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை மூலம் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | குறித்த காலப்பகுதியில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கான சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா. 30,146,459 கூட்டுமொத்தமான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கையிலுள்ள சிட்டைகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டமை யினாலும் மார்கழி மாதத்திற்கான சிட்டைகள் அடுத்த வருடம் தை மாத இறுதிப்பகுதிலேயே எமக்கு கிடைப்பதால் அவை நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | அனைத்து பொறுப்புக்களும் உரிய முறையில் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா. 823,615 ஆன நடைமுறையல்லா சொத்துக்கள் தீர்வையாக்கப்பட்டிருந்த போதிலும், நடைமுறையல்லா சொத்துக்கள் கூற்றில் சீர் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுகாதாரத் திணைக்களத்திற்குரிய ரூபா. 783இ005 ஆன தொகை யுஊயு-6 தவறுதலாக காட்டப் பட்டுள்ளது.<br>பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் அலுவலகத்தில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 40இ610 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் தவறுதலாக விற்பனை பெறுமதியை காட்டியதால் இத்தவறு ஏற்பட்டுள்ளது. | நடைமுறையல்லாச் சொத்துக்களின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய ரூபா.2,987,802 நடைமுறையல்லா சொத்துக்கள் நிதிநிலைமைக்கூற்றில் குறைத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்களின் அறிக்கையின் பிரகாரம் வேறுபாட்டுக்கான காரணங்களை சீர்செய்து இருகூற்றுக்களின் தொகைகளையும் இணங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | -மேற்படி- |
| (உ) | மாகாண கல்வித் திணைக்களத்திற்குரிய 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி மற்றும் சிஹாஸ் மென்பொதி அறிக்கையின் பிரகாரம் அத்திகதியில் அச் சொத்துக்களின் பெறுமதிகளுக்கிடையில் ரூபா. 5,351,156,079 இணக்கமில்லாத வேறுபாடொன்று காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | 11 வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பில் காப்புறுதி நிறுவனத்தால் மீள்நிரப்புச் செய்யப்பட்டிருக்காத ரூபா.9,944,632 ஆன நட்டம் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு (i) மற்றும் (ii) இல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நட்டப்பதிவேடு இற்றைப்படுத்தல் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டு அவை யாவும் தற்போது இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றின் குறிப்பு (ை) மற்றும் (ை) இல் வெளிப்படுத்தப்படும். | நட்டம் மற்றும் சேதம் நிதிக்கூற்றுக்களில் உரிய முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி அந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் வடக்கு மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால், மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் போன்ற காரணங்களினால் ஏற்படுகின்றது.

- வேண்டுமென்றே, விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு கருதவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக்கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளை வெளிப்படுத்துதல்களின் பொருத்தத்தன்மை மதிப்பீடு செய்யப்பட்டன.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டன என்பது, மதிப்பீடுசெய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 411-மாகாண விவசாயமும் கமநல சேவைகளும் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மீன்பிடி நீர்வழங்கல் அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 02 வேலைகளின் நிர்மாணப்பணி, நீடிக்கப்பட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தினுள் முடிவுறுத்தப்பட்டிராத போதிலும் அதன் செயல் நிறைவேற்று பிணைப்பொறுப்புக்களின் கால நீடிப்பு பெறப்பட்டிருக்காததனால் ரூபா 663,700 பெறுமதியான செயல் நிறைவேற்று பிணைப்பொறுப்பு வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முடியாதிருந்தது. | தர்மக்கேணி வீதி புனரமைப்பு தொடர்பில் எஞ்சிய வேலைக்கான கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன் பிடிபணமான தொகை பொதுவைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. பச்சிலைப்பள்ளி ஆயுர்வேத வைத்தியசாலைக்கான செயலாற்றுகைப் பிணைப் பொறுப்பினைக் கால நீடிப்புச் | ஒப்பந்தங்களை வழங்குவதில் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செயல் நிறைவேற்று பிணைப்பொறுப்புக்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

செய்து வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும் ஒப்பந்தகாரரினால் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் வேலையினை முடிவுறுத்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 தலைப்பு 431- மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறியின் 6.1.4 இன் ஏற்பாடுகளுக்கு மாறான வகையில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா.62,250,000 தொகையான 11 வேலைத்திட்டங்களுக்கு விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதனோடு தொடர்புடைய ஆவணங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்குகை தொடர்பில் பதிவேடு தற்போது பேணப்பட்டுவருகின்றது | குறித்த பெறுகை வழிகாட்டி நெறியின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) ஊடாக வெளியிடப்பட்ட ICTAD/SBD/03 ஆவணம் 01 ஆம் பிரிவின் 04 ஆம் பந்தி ஏற்பாடுகளுக்கு மாறான வகையில் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் வலுவான பதிவினை கொண்டிருக்காத ஒப்பந்ததாரருக்கு ரூபா. 2,160,207 ஒப்பந்தம் அளிப்பு செய்யப்படுவதற்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. | Covid 19 பெருந்தொற்று காரணமாக நாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலை, வேலை நிறைவேற்றம் மற்றும் அரச நிதியை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும் என்பதனையும் கருத்திற் கொண்டு மேற்படி வேலையானது குறைந்த கேள்விதாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. | குறித்த ஆவணத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் |
| (இ) | செயற்படுத்தப்பட்ட 08 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா. 18,261,241 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்கள் அனைத்தும் முடிவுறுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய கொரோனா நோய்பரவல் மற்றும் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக முழுமையாக பூரணப்படுத்தி, அவற்றிற்கான இறுதிக்கொடுப்பனவு களை குறித்த நிதியாண்டு முடிவுறுவதற்கு முன்னர் மேற்கொள்ளமுடியவில்லை. குறித்த நோக்கங்களை பூரணப்படுத்தக்கூடிய வகையில் தொடர்ந்து வரும் ஆண்டில் முடிவுறுத்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டுள்ளதுடன் குறித்த திட்டங்கள் எவையும் நடைமுறைப்படுத்தப் படாது கைவிடப்படவில்லை. | முன்னுரிமைகள் இனங்கண்டு பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஈ) | புழுதியாறு குளத்தினால் உயரமான விவசாய நிலங்களுக்கு ஏற்று நீர்ப்பாசன திட்டத்திற்காக (lift irrigation) ரூபா. 32 மில்லியன் பெறுமதி செலவிடப்பட்டு 2015 ஆம் வருடத்தில் முடிவுறுத்தப்பட்டிருந்த | 2016 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட பின்னர் வைபவரீதியாக அப்போதைய முதலமைச்சர் அவர்களினால் குறித்த அமைப்பினரிடம் உத்தியோகபூர்வமாக | கருத்திட்டங்கள் நிறைவேற்ற முன்னர் உரிய முறையில் சாத்தியவள ஆய்வு |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் நாளதுவரை அந்த செயற்திட்டமானது உபயோகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கையளிக்கப்பட்டிருந்தது. புனரமைக்கப்பட்டதிலிருந்து தற்போது வரைக்கும் குறித்த திட்டம் தொடர்பான அவசர அவசிய தொழில்நுட்பம்சார் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.3 தலைப்பு 450- மாகாண சுகாதாரத் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வைத்திய அதிகாரி - 01 தரத்தினை உடைய பிரதி வைத்திய நிர்வாக வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள வைத்திய அத்தியட்சகர் பதவியை கொண்டுள்ள வைத்திய அதிகாரி ஒருவருக்கு 22/99 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாறான வகையில் ஒதுக்கப்படுகின்ற வாகனத்திற்காக வழங்கப்படுகின்ற மாதாந்த போக்குவரத்து மற்றும் எரிபொருள்படி 2015 நவம்பர் மாதத்தில் இருந்து 2020 யூலை மாதம் வரை ரூபா. 3,599,640 கொடுப்பனவு இடம்பெற்றுள்ளது | வழங்கப்பட்ட ஒழுங்கற்ற மாதாந்த போக்குவரத்துப்படி ரூபா 3இ599இ640 இனை குறித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு மேற்கொள்வதற்கு மாகாண சுகாதார பணிப்பாளருக்கு சுகாதார அமைச்சின் செயலாளரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அறவிடப்பட்டதும் தங்களுக்கு அறியத்தரப்படும். | மேற்க்கொள்ளப்பட்ட முறையற்ற கொடுப்பனவுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பருத்தித்துறை வைத்தியசாலையில் 2016 ஒக்டோபர் மாதத்தில் நிறுவப்பட்ட ரூபா. 8 மில்லியன் பெறுமதியான எரியூட்டல் இயந்திரம் (Incinerator) போதிய பாதுகாப்பு இன்றியும், உத்தரவாத காலத்துக்கு பின் ஒழுங்குமுறையாக பராமரிக்கப்படாமையாலும் மற்றும் முறையான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமல் நிறுவப்பட்டதனால் இயங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. | இன்சினிறேட்டர் இடம் மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டபோதும், பொது மக்களின் எதிர்ப்பின் காரணமாக வேறு இடங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. எனினும் எரியூட்டும் இயந்திரத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கருத்திட்டங்கள் நிறைவேற்ற முன்னர் உரிய முறையில் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | ஏற்புக் கடிதம் வழங்கப்பட்ட இரண்டு வேலைகளை பொறுப்பேற்காத விலைக்கேள்வியாளர்களின் ரூபா 83,000 ஆன பிணை பொறுப்பினை இரத்து செய்து அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | Covid 19 தாக்கம் அதிகமாகவும் அதன் காரணமாக நாடளாவிய ரீதியில் மாவட்டங்களுக்கிடையில் பயணத்தடை போடப்பட்டிருந்ததால் அரச வருமானக் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை அறியத்தருகின்றேன். | வருமான இழப்பு ஏற்பட்டமைக்கான காரணம் அறியப்பட்டு வருமான இழப்பு நிவர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | விலைக்கேள்வியாளர் ஒருவர் வேலையினை நிறைவேற்ற தவறினால் செயல்நிறைவேற்றுப் பிணைப்பொறுப்பை (Performance Security) உரிய காலத்திற்குள் வருமானமாக்கப்படவேண்டும் என்ற 2006 ஆண்டின் பெறுகை வழிகாட்டி 5.4.8 (அ) ஏற்பாடுகளுக்கு ஏற்ப பணிமனையொன்றினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 228,000 வருமானமானது இழக்கப்பட்டுள்ளது. | ஏற்புக்கடிதத்தின் பிரகாரம் வேலை ஆரம்பிக்கும் திகதி 18.08.2021 எனக் குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்ட போதிலும் 15.09.2021 ஆம் திகதிய உத்தியோகபூர்வ அறிவுறுத்தலின் பிரகாரம் வேலை நிறுத்தப்பட்டதனால் குறித்த வழங்குனரின் செயல்திறன் நிறைவேற்று பிணைப்பணம் ரூபா 228,000.00 அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறி 5.4.8 (ஆ) பிரகாரம் ஒப்பந்தமொன்றை நிறைவேற்றுவதற்குரிய திகதியிலிருந்து அதற்கப்பால் 28 நாட்கள் வரை செயல்நிறைவேற்றுப் பிணைப்பொறுப்பு பெற வேண்டிய போதிலும், மதிப்பீட்டு பெறுமதி ரூபா. 91,710,849 ஆன 20 நிர்மாண வேலைத்திட்டங்களுக்கு ஒப்பந்தம் நிறைவடையும் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் செயல்நிறைவேற்றுப் பிணைப்பொறுப்பு பெறப்பட்டிருந்தது. | செயல் நிறைவேற்றுப் பிணைப் பொறுப்பினை தவறுதலாக வேலை நிறைவேற்ற நாள் வரை எடுக்கப்பட்டது. இனிவரும் காலங்களில் 28 நாட்கள் கூடுதலாக செயல் நிறைவேற்று பிணை பொறுப்பு எடுக்கப்படும். | குறித்த பெறுகை வழிகாட்டிநெறியின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் |
| | (ii) ரூபா.6,722,540 மதிப்பீட்டுப் பெறுமதியான வைத்தியசாலைக்கான உலர் உணவு பொருட்கள் பெறுகையின்போது பெறுகை வழிகாட்டியின் படி பெறவேண்டிய 10% பிணைப்பொறுப்பை விட ரூபா.336,127 குறைவாகப் பெறப்பட்டிருந்தது. | தற்போது 10% செயல் நிறைவேற்று பிணைப்பொறுப்பு பெறப்பட்டுவருகின்றது | -மேற்படி- |
| | (iii) பிணைப் பொறுப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காமல் ரூபா.41,931,033 பெறுமதியான 07 பொருட்கொள்வனவிற்காக ஒப்பந்த அளிப்பு செய்யப்பட்டிருந்தது. | இனிவரும் காலப்பகுதிகளில் பொருட் கொள்வனவின் போது செயல் நிறைவேற்றுப்பிணைப் பொறுப்பு பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறியின் 6.1.4 இற்கு மாறாக குறித்த திணைக்களத்தினால் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா.369,299,000 தொகையான 05 வேலைத்திட்டங்களுக்கு விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதனோடு தொடர்புடைய ஆவணங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்குகை தொடர்பில் பதிவேடு பேணப்பட்டுவருகின்றது | -மேற்படி- |
| (எ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறியின் 8.7.1 (ஆ) பிரகாரம் ஏற்றுக்கொள்ளல் கடிதம் விலைக்கேள்வி செல்லுபடிக்காலத்தினுள் வழங்க வேண்டிய போதிலும் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 1,620,000 ஒப்பந்தமொன்று விலைக்கேள்வி செல்லுபடிக்காலம் காலாவதியாகி 03 நாட்களுக்கு பின் வழங்கப்பட்டிருந்தது. | அதிக வேலைகள் காரணமாகவும் சுழற்சி முறையில் உத்தியோகத்தர் Covid - 19 இடைத்தங்கல் நிலையங்களிற்கு சென்றதனாலும் இவ் வேலைக்குரிய ஏற்றுக் கொள்ளல் கடிதத்தினை குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்ப முடியவில்லை. | -மேற்படி- |
| (ஏ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறியின் 8.9.1 (ஆ) ஏற்பாடுகளுக்கு மாறாக உடன்படிக்கை கைசாத்திடாமல் கூட்டு மொத்தம் | இனிவரும் காலங்களில் பெறுகை கைநூல் மற்றும் வழிகாட்டல் 8.9 (ஆ) இற்கு அமைவாக பண்டங்களுக்கான கொள்வனவுகளுக்கும் ஒப்பந்தம் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.43,436,553 எட்டு பெறுகைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) | நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) ஊடாக வெளியிடப்பட்ட ICTAD/SBD/03 ஆவணத்தின் 01 ஆம் பிரிவின் 30 ஆம் பந்தி பிரகாரம் ஏற்றுக்கொள்ளல் கடிதம் அனுப்பப்பட்டு 28 நாட்களுக்குள் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதும், அதற்கு முரணாக கூட்டு மொத்தம் ரூபா.13,677,000 நான்கு வேலைத்திட்டங்கள் 06 தொடக்கம் 38 வரையான நாட்கள் தாமதித்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. | Covid – 19 இன் பரவல் மற்றும் அரச அலுவலகங்களின் பணிகளும் 3/2021 இல சுற்றுநிருபத்திற்கமைவாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தமையால் பெறுகை நடவடிக்கை தொடர்பான தொழில்நுட்ப, மதிப்பீட்டு பணிகள் தாமதம் ஏற்பட்டதனால் தாமதம் ஏற்பட்டது. | குறித்த ஆவணத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் |
| (ஒ) | நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) ஊடாக வெளியிடப்பட்ட ICTAD/SBD/03 ஆவணத்தின் 01 ஆம் பிரிவின் 31 ஆம் பந்தியின் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளல் கடிதம் அனுப்பப்பட்டு 14 நாட்களுக்குள் செயலாற்றல் பிணைப்பொறுப்பானது பெறப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டும் ரூபா.126,792,770 பெறுமதியான 12 ஒப்பந்தங்களுக்கான செயலாற்றல் பிணைப்பொறுப்பு பெற்றுக்கொள்ளல் 02 தொடக்கம் 52 வரையான நாட்கள் கால வீச்சில் தாமதமடைந்திருந்தது. | ஏற்றுக் கொள்ளல் கடிதங்கள் பெற்றுக் கொண்ட ஒப்பந்தகாரர்கள் வேலைகளை ஆரம்பிப்பதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகளை வேலைத் தளத்தில் மேற்கொண்டு இருந்தனர். இருப்பினும் செயல் நிறைவேற்றல் பிணையினை தாமதமாக செலுத்தியிருந்தனர். | -மேற்படி- |
| (ஓ) | 14 வாகனங்கள் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாததனால் அல்லது வாகன பதிவுப் புத்தகம் இன்மையால் பயன்பாடற்று கைவிடப்பட்டுள்ளது. அத்துடன் மீளாய்வாண்டில் ஏற்பட்ட நான்கு வாகன விபத்துக்கள் தொடர்பில் ஆரம்ப விசாரணை இது வரை மேற்கொள்ளப்படாததுடன் முன்னைய ஆண்டுகளில் ஏற்பட்ட 04 விபத்துக்கள் தொடர்பில் இது வரை இறுதி பரிசீலனை முடிவடைந்திருக்கவில்லை. | 04 எண்ணிக்கையான வாகனங்கள் திருத்தம் மேற்கொள்ளப்படாமை தொடர்பில் விளக்கம் கோரப்பட்டுள்ளது. 02 எண்ணிக்கையான வாகனங்கள் மற்றும் 07 முச்சக்கர வண்டிகளின் உடைமை மாற்றத்திற்காக ஆவணங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 02 எண்ணிக்கையான வாகனங்களுக்கு முறைமைசார் விசாரணைகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 03 எண்ணிக்கையான வாகனங்களுக்கு ஆரம்ப விசாரணை அறிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது. 03 எண்ணிக்கையான வாகனங்களுக்கு ஆரம்ப விசாரணைகளினை விரைவாக முடிவுறுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், ஒரு வாகனம் முழுமையாக சேதமடைந்தமையால் காப்புறுதி நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை திருத்தம் மேற்கொள்ள போதுமான நடவடிக்கை மேற்க்கொள்ளப்படுவதுடன் விசாரணைகள் நிதி ஒழுங்கு மற்றும் தாபன விதிகளின் பிரகாரம் உரிய காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும். |
| (ஔ) | அனுமதிக்கப்பட்ட ஆளணியில் 1127 கூட்டுமொத்த எண்ணிக்கையான நிறைவுகாண் மற்றும் துணைநிலை மருத்துவ சேவை உத்தியோகத்தர்களின் | ஏழு பதவிகளுக்கான சேவைப்பிரமாணக்குறிப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏனையவற்றுக்கு மாகாண | சேவைப் பிரமாணக் குறிப்பு / ஆட்சேர்ப்பு திட்டம் போன்றவற்றை |

| | | | |
|---|---|---|---|
| | ஆட்சேர்ப்பு முறைமை நாளதுவரை இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | இற்றைப்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். |
| (ஃ) | அங்கீகரிக்கப்பட்ட 865 மருத்துவ பதவியணியில் 113 ஆளணி வெற்றிடங்கள் காணப்பட்டது. | மன்னார் மாவட்டத்திற்கான ஆளணி வெற்றிடம் 32 ஆக குறைவடைந்துள்ளன. யாழ் மாவட்டத்திற்கு ஆளணி பற்றாக்குறை 7 ஆகக் காணப்படுகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். |
| (க) | தாதி உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட 1119 பதவியணியில் 188 எண்ணிக்கையான ஆளணி வெற்றிடமாக உள்ளதுடன் அதில் 87 எண்ணிக்கை வெற்றிடங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படுகின்றது. | தாதிய உத்தியோகத்தர் நியமனத்தினால் வெற்றிடம் 126 ஆக குறைவடைந்துள்ளதுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் 58 ஆகவும் குறைந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திற்கான மேலதிக ஆளணி வெற்றிடம் சீர் செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**1.5.4 தலைப்பு 460 - மாகாண கல்வித் திணைக்களம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|
| (அ) | கோட்டக் கல்வி பணிப்பாளர் மற்றும் உதவி கல்வி பணிப்பாளர் பதவிகளின் வெற்றிடங்கள், அதிபர் சேவையில் உள்ள 30 பேர்களினாலும் ஆசிரியர் சேவையிலுள்ள 15 பேர்களினாலும் சேவையாற்றப்பட்டு வருகின்றது. | இவ் பதவியணியினரின் தொழிற்பாடுகள் அவசியமானவை. எனவே இவ் கடமைகளை ஆற்றக்கூடிய கல்வி நிர்வாக ஒழுங்கமைப்பின் அடுத்த கட்டத்திலுள்ள சேவையை சேர்ந்தவர்கள் கடமையை கவனித்தல் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைக் காவலாளி ஆளணியில் காணப்பட்ட 507 எண்ணிக்கையில் 224 எண்ணிக்கையான வெற்றிடம் காணப்படுகின்றதோடு உரியவாறு அங்கீகரிக்கப்படாத 6 எண்ணிக்கையான தொழிலாளர்களை கல்வி பதவியணியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிதியமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக புதிய நியமனங்களை வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | கூட்டுமொத்தம் ரூபா. 26.81 மில்லியன் பெறுமதியான 5 புதிய விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டு மின்னிணைப்பு மற்றும் தளபாட வசதிகளற்ற காரணங்களினால் கடந்த 3 தொடக்கம் 5 வருடங்களாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படாமல் இருக்கும் சொத்துக்கள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். |

**1.5.5 தலைப்பு 481 - மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 464 ஆம் அத்தியாயம் 19(2) ஆம் பிரிவுக்கு அமைய 32 கிராம அலுவலகர் பிரிவிற்காக தயாரிக்கப்பட்ட 702 எண்ணிக்கையான காணி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் 27 கிராம அலுவலகர் பிரிவிற்காக தயாரிக்கப்பட்ட 243 எண்ணிக்கையான அளிப்பு பத்திரங்கள் உரிய பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படாமல் 2014 ஆம் ஆண்டில் இருந்து கரைச்சி பிரதேச செயலகத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. | குறித்த காணி ஆவணங்களை ஒரு மாத காலத்திற்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அளிப்புப்பத்திரங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கையை விரைவுபடுத்தி ஒருமாத காலத்துக்குள் உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | வழங்கப்படாமல் உள்ள அனுமதிப் பத்திரங்கள், அளிப்புப் பத்திரங்கள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 6 பிரதேச செயலகங்களினால் வியாபார நோக்கங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ஒரு வருடத்திற்கு மேல் பழைய நிலுவை காணி குத்தகை வாடகை ரூபா. 21,407,487 அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட்டிருக்க வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 24,887,109 குத்தகைக் கட்டணத்தில் இவ்வருடம் ரூபா 1,290,222 அறவிடப்பட்டுள்ளது. மிகுதி அறவிட உரிய பிரதேச செயலாளர் பிரிவுகள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடப்படாத நிலுவைகளை திரட்ட போதிய முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.6 மாகாண நிதி முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வேறு அரச நிறுவனங்களிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள 30 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய 02 வருடங்களுக்கு மேலதிகமான ரூபா. 3,467,619 கடன் மீதிகள் நிலுவையாக காணப்படுகின்றது. | 31.05.2022 இல் உள்ளதன் அடிப்படையில் 30 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடவேண்டியகடன் மீதி ரூபா 2இ711இ245 ஆகக் குறைவடைந்துள்ளது. மேலும் இம் மீதியினையும் அறவிட்டுக் கொள்வதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அறவிடப்படாத நிலுவை தொடர்பில் தொடர் நடவடிக்கை விரைவுபடுத்தப் படல் வேண்டும். |
| (ஆ) | கடமைக்கு சமூகமளித்திருக்காத, இறந்த, ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் பதவி இடைநிறுத்தப்பட்ட 71 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா. 5,651,631 கடன் மீதியை அறவீடு செய்வதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை அறவீடு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கையின் காரணமாக தற்போது மேற்குறிப்பிடப்பட்ட வகுதியைச் சேர்ந்த 58 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியகடன் மீதி ரூபா 4இ066இ699 ஆகக் குறைவடைந்துள்ளது. | -மேற்படி- |
| (இ) | 5 செலவு விடயங்களில் காணப்பட்ட நிதி ஏற்பாடுகளை விஞ்சி ரூபா. 23,987,770 தொகை பொறுப்புகளிற்காக கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. | COVID – 19 தொற்று நோய் தொடர்பிலான எதிர்வுகூற முடியாத புதிய செலவினமானதும் மற்றும் அதிகரித்த செலவினமானதும், ஆண்டிறுதியில் இடம் பெற்றதும், பட்டியல்படுத்தப்படாதது மான செயலாற்றுகைகள் எதிர்வரும் ஆண்டின் நிதியேற்பாட்டினை எதிர்பார்த்து பொறுப்புக்களாக ஆண்டு | பாதீட்டுக் கட்டுப்பாடுகள் உரிய முறையில் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன. | |
| (ஈ) | 12 அரசிறை குறியீடுகளின் ரூபா. 313,483,834 பெறுமதியான எதிர்பார்க்கப்பட்ட வருமானம் சேகரிக்கப்பட்டிருக்காததுடன் அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 13 சதவீதம் தொடக்கம் 63 சதவீதமான வீச்சில் காணப்படுகின்றது. | COVID – 19 தொற்று நோய் காரணமான நாட்டின் முடக்கங்கள், பொருளாதார நடவடிக்கைகள் மீதான பாதிப்பு அரசிறை குறியீடுகளில் 13% முதல் 63% ஆன தொகை ரூபா 313,483,834 சேகரிக்கப்பட்டிருக்க வில்லை. | மாகாண நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு அமைய அரசிறை மதிப்பீடுகள் உத்தம மட்டத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | ரூபா. 80,855,814 கூட்டுமொத்தமான உள்@ராட்சி சபைகளுக்கு உரித்தான முத்திரை வரிகள் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக உரிய உள்@ராட்சி நிறுவனங்களால் கோரிப்பெற்றிருக்காமையால் மீளாய்வாண்டில் மாகாண சபையின் வருமானத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாண காணிப் பதிவகங்களிலிருந்து விபரங்களை பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் காணப்படுகின்றது. மீளளிப்பு கோரிக்கையினை சமர்ப்பித்து இம்முத்திரைத் தீர்வை மீளளிப்பினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் உள்;ராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன | உள்@ராட்சி நிறுவனங்களுக் குரிய தொகையினை இனங்காணக் கூடிய வகையிலான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |